# சுதந்திரன்

BUTANTIRAN

விலை சதம் 60. தொலைபேசி : 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 | ஆடி 10 | றஜபு 26 | (25-7-76) ஞாயிறு | புத்தகம் 30, | இதழ் 27

## "தமிழினத்தின் அமைதியான உரிமைக் கிளர்ச்சிக்கும் உலைவைக்கிறது அவசரகாலச் சட்டம்!"


### நீதிமன்றத்தில் ஜீ. ஜீ. தொடர்ந்து வாதம்!

"அவசரகாலச்சட்ட விதிகள் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை அபகரிக்கும் ஒரு சட்டமாகும். இந்த விதிகள் தமிழினம் தனது உரிமைகளுக்காக அமைதியாக, அஹிம்சை வழியில் கிளர்ச்சி செய்யும் அடிப்படை உரிமையைக்கூட பறிக்கிறது. ஆகவே செல்லுபடியாகாத, சட்டவலுவற்ற இந்த அவசரகாலச்சட்ட விதிகள் பற்றியும் பிரகடனம் பற்றியும் இந்த நீதிமன்றம் ஆராயக் கடமைப்பட்டுள்ளது."

—5-ம் பக்கம் பார்க்க

### தமிழ் இளைஞர்கள் விடுதலை!

உரும்பராயைச் சேர்ந்த மணிகரன் (சிர்மாறன்) நல்லூர் கல்வியங்காட்டைச் சேர்ந்த கந்தசாமி ஆகிய இளைஞர்கள் ஏழு மாத கால சிறை வாழ்வின்பின் யாழ் சிறையிலிருந்து சென்ற 16 7.76ல் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் கடந்த நவம்பரில் மூறையே பண்டாரவளையிலும், திருக்கேதிசுவரத்திலும் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர்.



நீதிமன்றத்தைவிட்டு திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் திரு. மு. திருச்செல்வமும் வெளியே வரும் காட்சி!

## இளைஞர்களை விடுதலை செய்யக்கோரும் இயக்கம் தமிழ் ஈழமெங்கும் ஆரம்பம்!

'சிங்கள அரசே! சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்' என்ற முழக்கத்துடன் சிறையிருக்கும் தமிழ் இளைஞர் வாரம் யூலை 23ம் நாளிலிருந்து தமிழ் ஈழம் அடங்கிலும் எழுச்சிவாரமாக அனுட்டிக்கப்படுகிறது

திருக்கோணமலையில்நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிறப்பு மாநாட்டில், யூலை 23 முதல் 30வரை தமிழ் ஈழமடங்கிலும் சிறையிருக்கும் தமிழ் இளைஞர் வாரத்தை அனுட்டிப்பதென்றும், யூலை 31ம் நாள் சட்டமறுப்பு இயக்கத்தை மேற்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது தெரிந்ததே. அந்த முடிவின் பிரகாரம் யூலை 23ல் இளைஞர் வாரம் விறுவிறுப்புடன் ஆரம்பமாகியுள்ளது.

இந்த இளைஞர் வாரத்தில் தமிழ் ஈழத்தின் தொகுதிகள் தோறும் கருத்தரங்குகளும், பொதுக்கூட்டங்களும் நடத்தப்படுகிறன. அக்கருத்தரங்குகளில், சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் நிலையும் அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதமிருக்க எடுத்துள்ள முடிவும் பொதுமக்களுக்கு எடுத்து விளக்கப்படுகிறது.

சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலைசெய்யும் படி வலியுறுத்தும் துண்டுப் பிரசுரங்கள் பல்லாயிரக் கணக்கில் அச்சிடப்பட்டு

—5-ம் பக்கம் பார்க்க

## சுதந்திரன் ஆசிரியருக்கு ரூ.105 செலவுதொகை வழங்கும் படி உத்தரவு!

சுதந்திரன் ஆசிரியருக்கு எதிராக பத்திரிகைப் பேரவையில் தாம் கொடுத்திருந்த முறைப்பாட்டை, கடந்த 20 7.76ல் பத்திரிகைப் பேரவை கவுன்சிலர்கள் முன்னிலையில் தாம் வாபஸ் பெறுவதாக திரு. மகேஸ்வரன் அறிவித்ததைத் தொடர்ந்து, சுதந்திரன் ஆசிரியருக்கு செலவு தொகை ரூபா 105-00 வழங்கும்படியும் பேரவை திரு மகேஸ்வரனுக்குக் கட்டளை பிறப்பித்துள்ளது.

# சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்ததேன்?

### பிரதமருக்கு சிறையிருக்கும் இளைஞர்கள் கடிதம்!

சாகும்வரை உண்ணா விரதமிருப்பது என்ற முடிவுக்கு தாங்கள் வந்ததற்கான கராணங்களை விளக்கிசிறையிலிருக்கும் தமிழ்இளைஞர்கள் பிரதமருக்கு நீண்ட கடித மொன்றை யெழுதியிருப்பதாகத் தெரியவருகிறது ஆண்டுக்கணக்காக நீதி விசாரணையின்றி சிறைச்சாலைக்குள் அணு அணுவாகச் செத்து மடிவதிலும் பார்க்க சிறைக்குள்ளே நீதி கேட்டு அறவழியிற்போராடி உயிரைவிடுவது உயர்ந்தது என்று அவர்கள் அதில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

"தமிழர் சமுதாயத்தை மீட்கப் போராடுவதும், மீண்டும் ஆள நினைப்பதும்தான் நாம் செய்த குற்றமானால் நீதிமன்றத்தில் நிறுத்துங்கள்; உங்கள் சட்டப்படி எங்கள் இலட்சியத்துக்காக தூக்கு மேடை ஏறவும் தயங்க மாட்டோம்'' என்றும் அவர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனராம்.

"இன்றுவரையிலும் எந்த நீதிமன்றத்திலும் எவ்வித விசாரணையுமின்றி மூன்று நான்கு ஆண்டுகளாக சிங்களச் சிறைகளில் பூட்டப்பட்டிருப்பதற்கு நாம் செய்த குற்றமென்ன? தமிழனாகப் பிறந்ததுதான் குற்றமா?

"சிங்கள இலங்கையில் 1971 ஏப்ரல் 5ம் நாள் உங்கள் அரசுக்கு எதிராக ஆயுதப்புரட்சி செய்த 17,000 சிங்கள இளைஞர்களை கைது செய்தீர்கள் பின்னர்; புனர்வாழ்வு வழங்கினீர்கள்; இன்றுவரையிலும் ஒருசில நூறுபேரைத் தவிர ஏனையோர் நீதிமன்றங்களில் விசாரணை செய்யப்பட்டும் செய்யாமல் விடுதலை செய்யப்பட்டுமுள்ளனர்.

ஆனால் 1972 மே 22ம் நாளிலிருந்து உங்கள் அரசினால் பிரகடனப்படுத்தப் பட்ட புதிய குடியரசு நாளிலிருந்து ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் மாணவர்களும் கைதுசெய்யப்பட்டு நீண்டபல ஆண்டுகளாக சிறைகளில் அடைத்து அழிக்கப்படுவதன் காரணம் என்ன? நீங்கள் ஆண்டுகொண்டிருக்கிறீர்கள்— வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்; நாங்கள் வாழவேண்டிய வயதில் எம்மை ஆளவேண்டிய காலத்தில் அடிமைகளாக்கப்பட்டு உங்கள் சிறைகளில் அடைக்கப்பட்டு அழிந்துகொண்டிருக்கிறோம்."

இவ்வாறு அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

"தமிழ்சமுதாயகத்தின் விடுதலைக்காக போராடும் சந்தர்ப்பமின்றி சிறைக்குள் அடைத்துவைக்கப்பட்டு அழிக்கப்படுகிறோம்; அதனால் சிறையிலிருந்தும் நீதிகேட்டு போராட முடிவு செய்துவிட்டோம்; இந்நாட்டில் நடைபெறவிருக்கும் கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடும் உலகமும் எங்கள்

—5-ம் பக்கம் பார்க்க

### வருந்துகிறோம்


சென்ற 21—7—76 புதன் சுதந்திர இதழின் விலை 35 சதம் என்பதற்கு பதிலாக 60 சதம் என்று தவறுதலாக அச்சிடப் பட்டுளமைக்காக வருந்துகிறோம். 60 சதம் கொடுத்து அப்பிரதியை பெற்றவர்கள் எமது வாசகர் விற்பனையாளரிடம் தாங்கள் கொடுத்த மேலதிக பணத்தைக் கேட்டு பெற்று கொள்ளவும்.

## கொடுஞ்சிறையில் விடுதலை வீரர் நடேசானந்தம் நீதிவிசாரணையின்றி இரண்டாண்டு பூர்த்தி

வாழை கமுகுகள் நாட்டப்பட்டிருக்கின்றன. வளமான பந்தல் போடப்பட்டிருக்கிறது. மேளம் முழங்குகிறது. நாதஸ்வர ஓசை அங்குள்ளோர் நெஞ்சங்களையெல்லாம் தொட்டு மகிழ்விக்கும் இனிய கானமாக விளங்குகிறது—அது ஒரு கல்யாண மண்டபம்.

பல வர்ண ஆடைகள் புனைந்து பளபளக்கும் ஆபரணங்கள் அணிந்து அழகுச் சிலையென்ன மணவிழாக் காண வந்தோரால் மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

மணமேடையில் தங்கச்சிலையென அமர்ந்திருக்கிறாள் ஒரு தங்கச்சி. தன் அண்ணன் அனுப்பி அஞ்சல்



—5-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீதரன்,
கொழும்பு-6

கே: திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் திறமையை பார்த்தீர்களா?

ப: சட்டத்துறையில் அவர் வகிக்கும் தனியிடத்தைப்பற்றி தமிழன் ஒவ்வொருவனும் நிச்சயம் பெருமைப்படமுடியும்; அவரது வாயிலிருந்து 'தனிநாடு' முழக்கம் எழும் நாளையே நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்,

ஃ

இராமநாதன்,
கொழும்பு-12.

கே: நீங்கள் முதலில் யாரை மதிக்கிறீர்கள்?

ப: தியாகிகளை!

கே: நீதிமன்றத்தில் திரு. திருச்செல்வம் எழுப்பிய தனிநாடு முழக்கத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: தமிழ் ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு காவியம்!

ஃ

சு. கலாஜோதி,
வீமன்காமம்,
தெல்லிப்பளை.

கே: தமிழினம் இப்போது ஒரு புதியபாதையில் சென்றுகொண்டிருக்கிறது என நினைக்கிறேன். அப்படியானால் அது எந்தப் பாதை?

ப: தமிழ் ஈழம் நோக்கிச் செல்லும் சுதந்திரப் பாதை!

ஃ

செல்வி கே. தமிழ்நங்கை.
திருநெல்வேலி வடக்கு.

கே: நீங்கள் அஹிம்சா வழியை கடைப் பிடிப்பதால் தான் தமிழ் நாடுகாண இத்தனை காலமென நான் நினைக்கிறேன்!

ப: 'கெட்—அப்—பேரலை' வைத்துக்கொண்டு பலாத்காரம் பேசுவதனால் பயன் இருக்கிறதா? அதனால் தீமை யாருக்கு?

ஃ

சு. ஜெயரத்தினம்,
துரையகம்,
கொடிகாமம்.

கே: தமிழ்ஈழக் கோரிக்கையை முறியடிக்கும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ள 20 அம்சத் திட்டம் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: 20 அம்சத்தால் மட்டுமல்ல வேறு எந்த அம்சத்தாலும் சுதந்திர தாகத்துக்கு ஈடுகொடுக்கமுடியாது. 20 அம்சம் வெறும் அட்டைக்கத்தி!

ஃ

இ. ஜெகதீசமூர்த்தி
பெரிய கடை
மன்னார்

கே: தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான பிரதமரின் மந்திர ஆலோசனை எந்த வகையில் அமையும்?

ப: ஹிட்லர் யூத இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க எடுத்த முடிவுபோல அமையாமலிருந்தால் சரி.

ஞா. பழனித்தம்பி
களுதாவளை
மட்டக்களப்பு

கே: கலைஞர் கருணாநிதியைப் பற்றி சிலவரிகள் கூறுவீர்களா?

ப: எவ்வித நெருக்கடியையும் சந்திக்கும் ஆற்றலுடையார்; எத்துறையிலும் புகுந்து வெற்றிபெறும் திறனுடையார்; காலம், நேரம் அறிந்து கழகக் கப்பலை வழி நடத்திச்செல்லும் மதியுடையார்; மீண்டும் தமிழக முதல்வராகும் வாய்ப்புடையார்!

ஃ

"சத்தியம்"
மன்னார்

கே: இதுவரை காலமும் தமிழர்களுக்கு எல்லாம் கொடுத்துவிட்டோம் என்று மேடைகளில் பேசியவர்கள், இனித்தான் தீர்த்து வைப்போம் என்கின்றனர். என்னத்தை அள்ளிக்கொடுக்கப் போகின்றனர்?

ப: ஏமாற்றத்தை!

ஃ

நோ. விமலாதேவி,
குச்சவெளி.

கே: திருமதி மங்கையர்க்கரசியைப் போன்று மற்றைய பெண்மணிகளும் தமிழுக்காக அதாவது சுதந்திரத்திற்காக உழைத்தாலென்ன?

ப: யார் உழைக்கவேண்டாமென்று தடுத்தது? உங்களைப் போன்றவர்கள் முன்வரலாமே!

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்;

> திருவாளர் குயுக்தியார்,
> 194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
> கொழும்பு-13.

---

● மறைமலையடிகள் நூற்றாண்டு விழா

# எழுத்தாளர் பேரவையும் இலக்கிய மன்றமும்
# இணைந்து கொண்டாடியது!

**மறைமலை அடிகளாரின் நூற்றாண்டு நிறைவு விழா, மறக்க முடியாத பெருவிழாவாக விளங்க, ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவையும், இலங்கை மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்றமும் இணைந்து கொண்டாடியது. மேற்படி விழா சென்ற சனிக்கிழமை 17-7-76 இல் மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் ஈடும் எடுப்பும் மிக்க முறையில் மிகச் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.**

மேடையில் ஒரு புறத்தில் மறைமலை அடிகளாரின் எழில் ஓவியம் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் முறையில் அழகுற அலங்கரிக்கப்பட்ட நிலையில், ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவையின் தலைவர் ஈழவேந்தன் தலைமை தாங்க, தேவகி கணேசன், துவாரகி கணேசன்; ஜீவகி கணேசன், யாழினி ஈழவேந்தன், லலிதா சுப்பிரமணியம்; கலாதேவி சுப்பிரமணியம் ஆகியோரின் இதயத்தை ஈர்க்கும் தமிழ்த்தாய்வாழ்த்துடன் விழா தொடங்கியது.

இதனை அடுத்து மறைந்த பெரும்புலவர் கருணாலய பாண்டியனார் அவர்கட்கு இரண்டு மணித்துளிகட்கு அஞ்சலிசெலுத்தப்பட்டது. இதன் பின் ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவையின் இணைச்செயலாளரும், சுதந்திரன் ஆசிரியருமான கோவை மகேசன் அவர்கள் தன் வரவேற்புரையில் விழாவில் கலந்துகொள்ள வந்துள்ள எல்லோரையும் வருக, வருக என வரவேற்றதோடு ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவையின்தோற்றம், தோற்றத்தின் நோக்கம், அத்துடன் கடந்த இரண்டரை ஆண்டுகளாக பேரவை ஆற்றி வந்த நிலையான பல்துறைப் பணிகளை சுவைபடகோவைப்படுத்தி கூறி முடித்தார். அவர் தன் உரையில் முற்போக்கு எழுத்தாளர் என்ற போர்வையில் தமிழ் இனத்தின் வாழ்வையும், வளத்தையும் பாதிக்கும் முறையில் செயற்படுவோரின் நயவஞ்சகப் போக்கினை மிக உணர்ச்சியுடன் சாடினார். கூட்டத்தில் கூடியிருந்தோரின் பெரும் கையொலி இவர் கருத்தினை ஆம் ஒதுவதாக இருந்தது. தொடர்ந்து திரு. அமல்ராஜ் அவர்கள் மறைமலை அடிகளார் மீது தனக்கே உரிய இனிய குரலில் மறைமலையடிகளாரின் புகழைப்பாடினார்.

இதனையடுத்து விழாவின் தலைவர் ஈழவேந்தன் அவர்கள் தமது தலைமையுரையில் மறைமலையடிகளார் நூற்றூண்டு நிறைவு விழாவினை தமது பேரவை ஏன் இவ்விதம் பெரு விழாவாக கொண்டாடுகிறது. என்பதை எடுத்துக்கள் பல [illegible] எடுத்தியம்பினர். அவர்தம் உரையில் மறைமலையடிகளார் தோன்ற முன்பு தமிழ் மக்களிடையே காணப்பட்ட உளப்போக்கையும் நிலவிய சூழ்நிலையையும் எடுத்து விளக்கியதோடு மறைமலையடிகள் தோன்றிய பின் தமிழ்மொழியின் தனித்தன்மையைப் பேணுவதைப் பொறுத்தவரையிலும் தமிழ் மக்களின் பண்பாட்டின் பல்துறை வளர்ச்சியிலும் ஏற்பட்ட மாறுதல்களை எடுத்துக்காட்டி கொண்டு விளக்கினர். மொழியின் தூய்மை அழிகின்றபோது அம்மொழி பேசுகின்ற இனத்தின் எண்ணிக்கையும் குறைவுற்று, அவ்வினம் வாழ்கின்ற எல்லைப்பரப்பும் குறுகி வருமென்பதினை புள்ளி விபரங்களோடு தமிழகத்தின் நிலையினை எடுத்துக் காட்டினர். அவர் மேலும் கூறுகையில் மொழித் தூய்மையைக்காக்கின்ற இப்பணி தமிழகத்தில் மட்டும் தோன்றியதாக நாம் கருதமுடியாது. ஆங்கில, பிரான்சு, சிங்கள மொழிகளின் வரலாறுகளிலும் மொழித் தூய்மையைக் காக்க அறிஞர்கள் ஈடுபட்டதனை மேற்கோள் காட்டி விளக்கினர். இறுதியில் வடநாட்டில் இருந்து வீசிய இந்தி என்ற வாடைக்காற்று தமிழகத்தில் வீசாது தமிழகத்தில் தமிழ் தென்றலே வீசும்படி அரண்செய்த பெருமாணிட மலையாக மறைமலையடிகளார் விளங்கினர் என்பதனை மக்களின் பெரும் கையொலிக்கிடையில் கூறி முடித்தார்.

இந்நிகழ்ச்சியினை அடுத்து 'தமிழக மறுமலர்ச்சியின் [illegible] தன் யாத்த நூலை திரு. அமிர்தலிங்கம் அவர்கள் வெளியீட்டு வைத்து, ஈழவேந்தன் தமிழ் இனிய தமிழ் மட்டுமல்ல இடையூறுகளுக்கிடையில் இவர் ஆற்றும் பணியும் தமிழ் இனத்தை வாழ்விக்கிறது என்று கூறினர். நூலின் முதற்படியினை யாழ்ப்பாணம் திருவளர் திரு. தா. திருநாவுக்கரசு பெற, இரண்டாம் படியினை இரகுநாதன் பதிப்பகம் திரு. க. ஸ்ரீ பத்மநாதன் பெற்றார். வெளியீட்டின்மீது பெற்ற நன்கொடையை தமிழ் விடுதலை இயக்கத்தின் சட்ட நிதிக்காக திரு. அமிர்தலிங்கத்திடம் ஈழவேந்தன் கையளித்தார். இச்செயலை மக்கள் வரவேற்று மகிழ்ந்தனர்.

நூலின் ஆய்வினைச் செய்த தென்புலோலியூர் திரு. மூ. கணபதிப்பிள்ளை அவர்கள் ஈழவேந்தனிடம் உறைந்து கிடக்கும் அறிவூற்றின் ஒரு சிறு துளியே இந்நூல் என்றும் மேலும் பல பெரு நூல்களை அவர் வெளிக்கொணர்ந்து தமிழ் மொழியின் ஆக்கத்திற்கு துணைநிற்க வேண்டுமென்று வேண்டினார்.

இந்நிகழ்ச்சியினை அடுத்து பா அரங்கு நிகழ்ச்சியில் "மறைமலை அடிகள் பிறந்திலரேல்" என்ற தலைப்பில் திரு. வே. வேந்தனார், இளங்கோ, திரு. இராஜமனோகரன், திரு. சண்முகநாதன், திரு. நாவண்ணன் ஆகியோர் தத்தம் — தனி முத்திரையைப் பதியச் செய்யும் முறையில், வாழ்கின்ற சூழ்நிலையினை நினைவில் வைத்து மொழிந்த பாக்கள் சுவையும் சூடு பிறப்பிக்கும் முறையிலும் அமைந்திருந்தன.

உரையரங்கு நிகழ்ச்சியில் திரு. க. நவசோதி அவர்கள் மறைமலை அடிகளின் கலைச் சொல்லாக்கம் என்ற தலைப்பில் உரை நிகழ்த்துகையில் கலைச் சொல்லாக்கத்தில் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளை விளக்கியதோடு அவற்றை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதனையும் எடுத்துக் காட்டுகளோடு விளக்கியது பலரின் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்தது. இதுபோன்றே 'மறைமலை அடிகள் வழியில் சட்டவாக்கம்' என்ற தலைப்பில் திரு. கனகமனோகரன் சட்டத்தரணி, சட்டத்துறையில் தமிழ்ச் சொல் ஆக்கத்தில் ஏற்படும் தொல்லைகளை விளக்கி அவர் சட்டத்துறையில் பேரறிஞர் சண்முக சுப்பிரமணியம் ஆக்கிய நூல்களை துணை நிற்கும் என்பதனை சான்றுகளோடு விளக்கினர். சட்டத்துறையிலும் தமிழ் வளர்ந்து வருகின்றதென்பதற்கு இவரின் உரை சான்ருய் விளங்கியது.

முதுபெரும் அறிஞர் செந்தமிழ்ச் சின்னத்தம்பி அவர்கள் மறைமலை அடிகளுக்கும் தனக்குமுள்ள நெருங்கிய உறவினை விளக்கியபோது இனிய பழைய நினைவுகள் மக்கள் உள்ளத்தை நிறைத்தன.

திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் உரை நிகழ்த்துகையில் மறைமலை அடிகள் தமிழ் மக்களிடையே ஏற்படுத்திய தாக்கம் மாபெரும்

—6-ம் பக்கம் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றத்தில் நாம்!

அன்பு நண்பா,

ஈழத்தமிழினத்தின் இதயவேட்கை—விடுதலை முழக்கம் இன்றைக்கு நீதிமன்றத்திலும் கேட்கத்தொடங்கிவிட்டது; பொது மேடைகளிலும், பட்டி மன்றங்களிலும் ஆட்சி மன்றத்திலும் இதுவரை எழுப்பப்பட்டுவந்த தமிழ்ஈழ சுதந்திரகீதம் அரசு போட்ட தடைகளையெல்லாம் மீறி நீதிமன்றத்திலும் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டது! எங்கும் இது பற்றியே பேச்சு; எவர் நெஞ்சிலும் இது பற்றியே எண்ணம்; இதயமெலாம் புதிய முறுக்கேறிய உணர்வு; ஏடுகளில் வெளிவரும் நம் தலைவர்களின் வாதங்களைக் கேட்பதிலே ஒரு பூரிப்பு; ஆம், ஏறாத செவிகளில் எல்லாம் இன்று நமது சுதந்திர முழக்கம் ஏறத் தொடங்கிவிட்டது; புரியாதவர்கள்—புரிய மறுத்தவர்கள் எல்லாம் இதைப்பற்றிப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதிலே இன்று ஆர்வம் காட்டுகிறார்கள்! அந்த அளவுக்கு, நமது தலைவர்கள்மீது வழக்குத் தொடர்ந்ததன் மூலம்—தமிழ் ஈழப் பிரச்சினையை உலகறியச் செய்வதற்கு அருமையான வாய்ப்பை அளித்த அரசுக்கு உண்மையிலேயே நாம் நன்றி செலுத்தத்தான் வேண்டும்!

ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை? என்று முழங்கிய தமிழ் ஈழத்தின் தேசியக் கவி காசி ஆனந்தன் சிறைக் கூண்டுக்குள்ளே வாடும் அதே நேரத்தில் — அக்கவிஞன் எழுப்பிய இந்த விடுதலை முழக்கம் நமமுடைய திருச்செல்வம் அவர்களினால் நீதி மன்றத்திலே எழுப்பப்பட்டிருக்கிறதைப் பார்க்கும்போது நமது சிந்தை, அணு ஒவ்வொன்றுமே துள்ளியெழுகிறதல்லவா?

ஆட்சியாளரே — உங்கள் சட்டத்தைக் கொண்டே உங்களை மடக்குவோம் — என்ன எண்ணிவிட்டீர் தமிழ்ச் சாதியின் மதி நுட்பத்தை? என்று கேட்கின்ற முறையிலே—தமிழர் கூட்டணித்தலைவர்களை கைதுசெய்வதற்கும், வழக்குதொடருவதற்கும் பேச்சு, எழுத்து கருத்து சுதந்திரங்களை கட்டுப்படுத்துவதற்கும், சிறைச்சாலைகளிலே எண்ணற்ற தமிழ் இளைஞர்களை ஆண்டுக்கணக்காக விசாரணையின்றி அடைத்துவைத்துக்கொடுமைப்படுத்துவதற்கும் தமிழ் ஈழத்தை ஓர் கைப்பற்றப்பட்ட பிரதேசம் போலக்கருதி — ஆங்கிலேனைத்தநேரங்களில் எல்லாம் வீடுகளில்புகுந்து சோதனையிடுவதாகக் கூறி பெண்டிர்பிள்ளைகளைப் பயமுறுத்துவதற்கும், இன்னும் பலகொடுமைகளுக்கும் மூலகாரணமாயமைந்திருக்கும் அவசரகாலச் சட்ட பிரகடனமும் அதன் கீழ் வெளியிடப்பட்ட பிரமாணங்களும் முறையற்றது; செல்லாதவை என்று சட்ட ஆதாரங்களையும் உதாரணங்களையும் அள்ளிவீசி தனக்கேயுரிய மணிமணியான அழகான ஆங்கிலத்தில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் புரியும் சட்டவாதம் கண்டு தமிழர்கள் பெருமையடைகிறார்கள்; தருக்கர்ரோ சிந்தை கலங்குகிறார்கள்!

இலங்கை ஒரு நாடென்பது போலித்தனமானவாதம்; தமிழ்நாடு, சிங்களநாடு என இரு நாடுகளைக்கொண்டது இலங்கை; 1619 வரை தனி நாடாக தனியரசோச்சித் தலை நிமிர்ந்து வாழ்ந்த பரம்பரையினர் நாம்; ஆண்ட இனத்தினர் நாம்; வடக்கு, கிழக்கு, புத்தளம் வரை நீண்டு பரந்து விரிந்திருந்தது தமிழரசு; போர்த்துக்கீயன் தான் போரிட்டு நம் தமிழ் நாட்டை அபகரித்தான்; அந்தத் தமிழ் நாட்டை இன்று தாம் நினைத்ததுபோல ஆளுவதற்கு சிங்களவருக்கு அதிகாரமில்லை; தனித்தமிழ் நாடாகிய தமிழ ஈழத்தின் மீது, தனிச்சிங்கள நாடு ஆதிக்கம் செலுத்தமுடியாது; தமிழ்மக்களின் இறைமையையும் சுயாதிபத்திய உரிமையையும் தமிழ் மக்கள் தாம் பயன்படுத்த வேண்டுமே தவிர, சிங்கள இனத்துக்கு அதைப் பயன்படுத்த உரிமை கிடையாது; சிங்கள நாடு தன் விருப்பப்படி தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத அரசியலமைப்பொன்றை உருவாக்கி அதைத் தமிழ் மக்கள் மீது திணிக்கமுடியாது; எங்கள் இறைமையையும் சுயாதிபத்தியத்தையும் நாம் சிங்கள மக்களிடம் எப்போதாவது கையளித்ததுமில்லை; அல்லது அவர்கள் எம்மிடமிருந்து அதைக் கைப்பற்றியதுமில்லை; தமிழ் ஈழத்தின் மீது சிங்கள நாடு திணித்துள்ள அரசியல் திட்டத்தை எதிர்த்து தமிழ் மக்கள் போராடி வருகிறார்கள்; அதைத் தீர்ப்பிட்டுத்தொளுத்தியும் இருக்கிறார்கள்! தங்களுக்கென சொந்தமாக நாடு இல்லாத பாலஸ்தீனியர்கள், இன்று தமக்கோர் தாயகம்வேண்டும் என்று கோருவதை நியாயமானது என்று ஏற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபை, தமக்கென சொந்த நாடும் மொழியும் கலை கலாச்சாரமும், வரலாறும் பெற்றிருக்கும் ஈழத்தமிழ் மக்களின் இறைமையையும் சுதந்திரத்தையும் அங்கீகரிப்பதிலே தவறுண்டோ? தடையுண்டோ? பாலஸ்தீனர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு அனுதாபம் காட்டும் சிங்கள அரசு ஈழத்தமிழர்களின் கோரிக்கையையும் ஏற்றால் என்ன? எங்களைப் பிரிந்துசெல்வதற்கு இடமளியுங்கள்''!

இவ்வாறு வரலாற்று ஆதாரங்களை அள்ளிவீசி அரசியல் ஆதாரங்களை எடுத்துச்சொல்லி—உணர்ச்சியுடனும் உத்வேகத்துடனும் ஈழத் தமிழர்களின் இதயதாகத்தை — விடுதலை உணர்ச்சியை — நீதிமன்றத்தில் நம்முடைய திருச்செல்வம் அவர்கள் அழகாக எடுத்து வைத்தபோது எழுந்த மகிழ்ச்சிக்களவேது? அதைக் கேட்டபோது செவிகளில் செந்தேனன்றோ பாய்ந்தது? உள்ளத்தில் புதிய உணர்ச்சியன்றோ ஊற்றெடுத்தது? ஏடுகளில் அதைப் படித்தோர் பெற்றிட்ட எழுச்சிக்கோர் எல்லைதான் ஏது?

நீதிமன்றத்தில் திருச்செல்வம் அவர்கள் நிகழ்த்திய உரை நம்முடைய தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஓர் வரலாற்றுப் பெட்டகமாக—புதிய புறநானூறாக அடுத்துவரும் தலைமுறைகளுக்கோர் வழிகாட்டும் ஒளி விளக்காக — அணையா விளக்காக —விளங்கிடும் என்பதிலே ஐயம்தான் ஏது?

## அரசியல் மடல்

நீதிமன்றத்திலே இந்த வாதப்பிரதிவாதங்கள் எல்லாம் நடக்கின்ற நேரத்திலே குற்றவாளிக்கூண்டிலே அமர்ந்திருக்கிற தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் தானைத்தளபதி அண்ணன் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களின் முகத்தைப் பார்ப்பேன்! அவர் முகத்திலே வழமையாக ஒளிவிடும் அதே புன்னகை; அதே உறுதி; அதே வைராக்கியம்! ஆம், உறுதிகொண்ட நெஞ்சினராக, ஒளி படைத்த கண்ணினராக விளங்கும் அண்ணனைக் காணும்போது அவரது வடிவத்திலே உருவத்திலே ஈழத்தமிழினம்தான் எனக்குத் தோன்றுகிறது!

அழுத்தமான இலட்சிய ஆர்வம், உரமேறிய கொள்கைப் பிடிப்பு, விடுதலை வேட்கை, சிந்தனைத்தெளிவு, போர்க்குணம், தூய்மை, சுதந்திர வெறி, யாராலும் விலைக்கு வாங்க முடியாத வைரநெஞ்சம், தன்னையே அழித்துக்கொண்டு ஒளி தரும் தியாக உணர்வு, ஆகிய பல்வேறு பண்புகளின் கூட்டு மொத்தமாக விளங்கும் நம் தலைவர் — தமிழ் சமுதாயத்தின் தனிப்பெரும் பிரதிநிதியாகவன்றோ குற்றவாளிக் கூண்டிலே காட்சி தருகிறார்!

வழக்கின் முடிவைப்பற்றி — விளைவைப் பற்றி — கவலையில்லை; வழக்காடுவதன் மூலம் தமிழினத்தின் பிரச்சினையை உலகறிய நாடறிய வைப்போம்; நமது பிரச்சினையிலுள்ள நியாயத்தை நானிலமும், நல்ல நெஞ்சங்களும் அறியவைப்போம் — வழக்கின் முடிவில் சிறைத்தண்டனையானாலும் — சொத்துப்பறிமுதலானாலும் — எதையும் தமிழினத்திற்காக ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருப்போம் என்கிற உறுதி அவரது முகத்தில் பளிச்சிட்டபோது அண்ணன் அமிர்தலிங்கம் ஒரு கர்மயோகியாக காட்சியளித்தார்!

[illegible] வழக்கு நமது பிரச்சினைகளை எடுத்துச்செல்வதற்கு நல்லதொரு வாய்ப்பு; அதை நல்ல முறையிலே பயன்படுத்தத்தான் வேண்டும்; நல்ல முறையிலே பயன்படுத்தியும் வருகிறார்கள் நம்மவர்கள்! ஆனால் இந்த வழக்கின் வெற்றி தோல்வியில் தங்கியிருப்பதல்ல தமிழினத்தின் மீட்சியென்பதனை நாம் எந்தக்கட்டத்திலும் மறந்துவிடக்கூடாது!

ஆட்சி மன்றத்தையும்—சரி நீதி மன்றத்தையும் சரி நமது விடுதலைக் கோரிக்கையை எடுத்துச்சொல்லும் ஒரு மேடையாக வாய்ப்பு வரும்போதெல்லாம் பயன்படுத்துகிறோமே தவிர— இவற்றால் நமது சுதந்திரத்தைப் பெற்றுவிடமுடியும் என்கிற தவறான எண்ணம்—தப்பான சிந்தனை — நமது மக்களுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது!

நம்முடைய தியாகத்தினாலும்—நம்முடைய இடைவிடாத உழைப்பினாலும், சளைக்காத — அதே சமயம் கட்டுப்பாடான போராட்டத்தினாலும் நாம் நமது சுதந்திர பூமியை மீட்டுக் கொள்ளமுடியுமே தவிர—வேறு எவற்றினாலும் நமது விடுதலையை வென்றெடுத்துவிடமுடியாது!

தியாகமே சுதந்திரப் பயிருக்கு நீராகும். வீரன் சிவகுமாரன் சிந்திய செந்நீரும்—சிறைச்சாலைகளில் விசாரணையின்றி ஆண்டுக்கணக்காக அடைத்து வைக்கப்பட்டு சித்திரவதையை அனுபவித்துவரும் நம் உடன்பிறப்புக்கள் விடுகின்ற பெருமூச்சும் — அவர்களைப்பெற்றோரும் மற்றோரும் சிறைக்கு வெளியில் வடிக்கின்ற கண்ணீரும் — எண்ணற்ற வீரத்தமிழ் இளைஞர்கள் இனிய சுதந்திரத்தைத்தேடி பட்டினி கிடந்தும், பசியால் மெலிந்தும் பயமின்றி எழுதிவரும் வீரச்செயல்களுமே — தமிழ் ஈழ சுதந்திரப்பயிரை இன்று வளர்த்து வருகின்றன! இந்த உண்மையை எச்சந்தர்ப்பத்திலும் மறந்து நமது கவனத்தை எங்கோ எதிலோ செலுத்திவிடக்கூடாது; நமது சிந்தை முழுவதும், சுதந்திர இயக்கத்தின் மீதே படிந்திருக்கவேண்டும்!

''எங்களது பிரச்சினைகள் குறித்து நாம் நேர்மையுடனும் உணர்ச்சியுடனும் நடந்துகொள்கிறோம் என்பதனைப் புலப்படுத்த விரும்புகிறோம். எங்கள் தாய்நாட்டை மீட்டெடுக்க எந்தவழி நியாயமானதென நாம் கருதுகிறோமோ அதே வழியைப் பின்பற்ற நாம் தயங்கமாட்டோம்; எனவே எமது சொந்த உத்திகளைக் கையாண்டு பாலஸ்தீன அரேபியர்கள் அத்தனை பேரினதும் இறுதித் துளி இரத்தம் சிந்தும் வரையில் தொடர்ந்து போராடுவோம்!''

என்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரான யசிர் அரபத்தின் பிரதிநிதியாக இலங்கைவந்துள்ள ஜனாப் அப்துல் அடெல் கூறியுள்ளதில் ''பாலஸ்தீன அராபியர்கள்'' என்பதை ''ஈழத் தமிழர்கள்'' என்று மாற்றிவிட்டால், அவர் சொன்ன ஒவ்வொரு சொல்லும் ஈழத் தமிழ் மக்களுக்கும் அப்படியே பொருத்தமானதாக அமைந்திருக்கிறது.

ஆம், எங்கள் தாய்நாட்டை — தமிழ் ஈழத்தை மீட்க நமக்குச் சரியென்றுபடும் பாதையில் சென்று இறுதிவரை போராடுவோம்!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# நீதி குவிப்பீர்!

திருகோணமலை மாநாட்டில் எடுத்த தீர்மானத்தின்படி தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் துணை அமைப்புக்களான தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை ஆகிய இயக்கங்களும் யூலை 23 முதல 30 வரை "சிறையிருக்கும் தமிழ் இளைஞர் வாரத்தை" அனுட்டிக்கின்றன.

இந்த நாட்டில் புதிய குடியரசு வந்த நாள் தொடக்கம் அது தமிழ் மக்களைப் பொறுத்தவரை கொடியரசாகவே இயங்கிவருகிறதென்பது வெள்ளிடைமலை! அதிலும் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் தொடர்ச்சியாக வெளியுலகமே தெரியாமல் காராக்கிருகத்தின் உள்ளே தள்ளப்பட்டிருக்கிருர்கள்!

விசாரணையுமின்றி — விடுதலையுமின்றி அவர்கள் வெஞ்சிறையில் வாடுகிறார்கள்!

வெளியிலோ அவர்களைப் பெற்றோர் — அவர்களது குடும்பத்தினர் வேதனைக்கடலிலே விம்மிப்புலம்புகிறார்கள்!

வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கிச்சீரழிகின்றன பல குடும்பங்கள்!

மெழுகுவர்த்திபோல தம்மையழித்துத் தமிழினத்துக்காக ஒளிதந்துகொண்டிருக்கும் இத்தியாக விளக்குகளின் குடும்பங்களைக் கண்கலங்கவிடாது பாதுகாப்பது தமிழ் சமுதாயத்தின் கடமையல்லவா?

இந்த இளைஞர்கள் சிறைசென்றதும், விசாரணையின்றி வெந்துயருறுவதும் தமக்காக, தன்னலத்துக்காக வல்ல; தமிழ் சமுதாயத்தின் மீட்சிக்காகத்தான் என்பதை ஒவ்வொரு தமிழனும் மறந்துவிடக்கூடாது.

தமிழ் சமுதாயத்துக்காக பணியாற்றுபவர்களை தாங்கவேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமையும் பொறுப்பும் அல்லவா?

எனவே ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் "சிறையிருக்கும் தமிழ் இளைஞர் வாரத்தில்" தங்கள் ஒருநாள் ஊதியத்தையாவது இளைஞர் நிதிக்கு வழங்குவதை தன்னுடைய புனிதமான கடமையாக கருதவேண்டும்!

தமிழினத்துக்காக—தமிழ் சமுதாயத்துக்காக முழுமையாகத் தம்மை அர்ப்பணித்துத் தியாகம் செய்பவர்களை தாங்கி நிற்கவேண்டியது சுதந்திரத்தை நாடி நிற்கும் தமிழ் சமுதாயத்தின் முதல் கடமையாகும்!

சுதந்திர இயக்கத்தில் ஒவ்வொருவரும் வெறும் பார்வையாளர்களாக இல்லாது பங்காளர்களாக மாற வேண்டும்!

சுதந்திரத்துக்காக உழைக்கும் தியாகிகளை தாங்கி நிற்பதும் சுதந்திர இயக்கத்தில் பங்கு கொள்வதே!

பஞ்சமும் நோயும் நின்
மெய்யடியார்க்கோ?

என்று பாரதி கேட்டதுபோல் — இன விடுதலைக்காக உழைப்பவர்களை பஞ்சத்திலும் நோயிலும் பரிதவிக்கவிட்டு பாழாய்ப்போன தமிழ்ச்சாதி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்குமானல், சுதந்திரத்தின் நிழலில் நிற்கும் அருகதையைக்கூட அது பெறமுடியாது!

எனவே சிறையிருக்கும் தமிழ் இளைஞர் வாரத்தில், இந்த உண்ணாவிரதத்திலீடுபட்டு சத்திய சோதனையில் இறங்கும் இளைஞர்களுக்காக இறைவனை வேண்டுதல் செய்யுங்கள்! அத்துடன் மறக்காமல் குறைந்தது உங்கள் ஒருநாள் ஊதியத்தையாவது இளைஞர் குடும்ப உதவி நிதிக்கு வழங்குங்கள்!

இதுவே நமது வேண்டுகோளாகும்!

---

தொடர்புமற்ற சிறுபான்மை மக்களாகிய தமிழ் மக்கள் எழுப்பியுள்ள அரசியல் பிரச்சினைகளையும் முன்பு உருவாக்கப்பட்ட அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் உள்ளடக்கி சிறுபான்மை மக்களாகிய தமிழ் உறுப்பினர்கள் சிறையில் அடைக்கப்படுகிருர்கள். இந்நிலை என்றும் தொடரும் ஆபத்தும் உண்டு.

1975 யூலை 27 இல் யாழ்ப்பாணம் அல்பிரட் துரையப்பா கொல்லப்பட்டதையடுத்து 150 தொடக்கம் 200 தமிழ் இளைஞர்கள் சிலர் பிடிக்கப்பட்டதும் சிலர் கண்டு பிடிக்கப்பட்டதுமே இச்சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகளாக விளங்குகிறது. இது தமிழ் சமுதாயத்தைக் குறிப்பாகப்பாதித்துள்ளது.

அடைக்கப்பட்டோரின் பெரும்பாலானோர் விடுதலை செய்யப்பட்டதும் அடைக்கப்பட்டுள்ள 42 தமிழர்களில் கடைசி 20 தமிழர்களாவது அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் முன்பு பிடிக்கப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விடுதலை செய்த பின் மீண்டும் பிடிக்கப்பட்டவர்களாக காணப்படுகிருர்கள். யூலை 27 இல் ஏற்பட்ட நிகழ்ச்சி காரணமாக ஐயத்தின் பேரில் அடைக்கப்பட்டதிலும் பார்க்க பாதுகாப்புக் காரணங்கட்காகவே மீண்டும் அடைக்கப் பட்டுள்ளார்கள் போல் தோன்றுகிறது.

# சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர் நிலை பற்றி

# 'அம்னெஸ்டி இன்டர் நாஷனல்' அறிக்கை!

அனைத்துலக நிறுவனமான 'அம்னெஸ்ட்இன்டர்நாஷனல்' இலங்கைச்சிறையில் நீதிவிசாரணையின்றி வாடுவோர் நிலையை நேரில் கண்டறிய 1975 சனவரியில் இலங்கைக்கு ஓர் குழுவை இலண்டனில் இருந்து அனுப்பி வைத்தது. இந்தக் குழு சனவரி 9 முதல் 15 வரை இங்கு முகாமிட்டிருந்து, சிறையில் வாடுவோர் நிலை பற்றி ஆராய்ந்த பின்னர் தலைமைப் பீடத்துக்கு தனது அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கை 19 — 5 — 76ல் அம்னஸ்ட் இன்டர் நாஷனலால் வெளிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் சிறைகளிலுள்ள தமிழ் இளைஞர்கள் பற்றிக்கூறப் பட்டுள்ளதை அப்படியே கீழே தருகிறோம்.

"1971இல் ஏற்பட்ட கிளர்ச்சி காரணமாக சிறையில் அடைக்கப்பட்ட 2000 சிறைக் கைதிகள் என மதிப்பிடப்பட்டோருடைய சிறை வாழ்வு பற்றியும், அவர்கள் மீது எடுக்கப்படும் சட்ட நடவடிக்கை பற்றியும், இலங்கைக்கு வந்துள்ள அனைத்துலக மன்னிப்பு குழுவின் அறிக்கை விளக்குகிறது. அத்துடன் இது கால வரை நீதிமன்றத்தில் நிறுத்தப்படாமல், அல்லது குற்றச் சாட்டு சுமத்தப்படாது பல காரணங்களுக்காக அவசரகால ஒழுங்கு விதிகளில் கீழ் சிறிய எண்ணிக்கையை யுடைய தமிழ் இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ள காரணத்தையும், சூழ் நிலையையும் இவ்வறிக்கை விளக்குகிறது.

..................................

..................................

### தமிழ் சிறைக் கைதிகள்

1971 ஏப்பிரலில் ஏற்பட்ட கிளர்ச்சி காரணமாக அடைக்கப்பட்ட சிறைக் கைதிகள் நீங்கலாக, 1972 முடிவில் அடைக்கப்பட்ட தமிழ் சமூகத்தின் 42 இளைஞர்களும் அனைத்துலக மன்னிப்புக்குழுஇலங்கைக்குவருகை தந்தபோது அடைக்கப்பட்டிருந்தனர். 1972இல் உருவாக்கப்பட்ட குடியரசுச்சட்டம் மொழி, சமயத்தைப்பொறுத்தவரை தந்துள்ள ஏற்பாடுகள் தமிழர்களுக்கு பாகுபாடு காட்டுவனவாக இருந்தமையால் கூடிய அளவு மாகாண சுயாட்சிக்கு தமிழர்கள் கிளர்ச்சி செய்ததற்காக அடைக்கப்பட்டதாக தெரியவந்தது. (அனைத்துலக மன்னிப்புக்குழு அறிந்தவரையில் இக்கிளர்ச்சி பொதுவாக அமைதியுடையதாகவே விளங்கியதென்பது தெரியத்தக்கதாயிருக்கிறது) அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் ஒரு ஆண்டுதொட்டு 2 அல்லது $2\frac{1}{2}$ ஆண்டுக்கு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் நீதிமன்றத்திற்கு முன்பு கொண்டுவரப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. எனினும் அதிர்ஷ்டவசமாக 1972 சனவரி முடிவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட 42 இளைஞர்களில் 23 இளைஞர்களை விடுதலை செய்துள்ளதாக அனைத்துலக மன்னிப்புக் குழுவிற்கு நீதி அமைச்சர் அவருடைய கடிதத்தில், குறிப்பிடத்தக்க [illegible] கத்தக்க மூவர் நீங்கலாக ஏனையோர் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் குறிக்கப்பட்டிருந்தது ஆனல் ஓராண்டு கடந்த நிலையில் அதாவது 1976 சனவரியில் அமைச்சர் உறுதிமொழி அறிந்திருந்த போதும் நீதிமன்றத்தில் கொண்டுவராத நிலையில் ஐந்து பேர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

மேற் குறித்த இளைஞர்களை விடுதலைசெய்தபோது இவர்கள் வன்முறையில் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு குற்றம் சாட்டிய போதும், அவர்கள் மீதும் நீதிமன்றம் குற்றம் சுமத்தியதும் இல்லை அதுமட்டுமல்லை இவர்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவுமில்லை. அதுமட்டுமல்ல, சர்வதேச மன்னிப்புச் சபையின் பேராளர்கள் விடுதலை செய்யப்பட்ட 8 இளைஞர்களைக் கண்டு உரையாடிய போது அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் பிடிக்கப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட இவர்கள் எந்த சட்டத்தரணிகளோடும் தொடர்புகொள்ளும் வாய்ப்பும் மறுக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

1971இல் ஏற்பட்ட கிளர்ச்சியை எதிர்நோக்கியே 1971இல் அவசர காலச் சட்டம் கொண்டுவரப்பட்டது. எனினும் முன்பு அவசர காலச்சட்டம்கொண்டுவந்த போது உள்ளடக்கப்படாத பல விடயங்கள் உள்ளடக்கும் முறையிலேயே அவசர கால ஒழுங்கு விதிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக 1971இல் ஏற்பட்ட கிளர்ச்சியுடன் எதுவித

..................................

..................................

சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களைப் பற்றி 75செத்தெம்பர் 2இல் தேசிய பேரவையில் பிரதமர் பேசுகையில் (தேசிய பேரவை விவாதங்கள் பக்கம் 684ஐப் பார்க்கவும்) பிடிக்கப்பட்ட இளைஞர்கள் சிலர் தாம் இக்குற்றங்களைச் செய்துள்ளார்கள் என்பதை ஒத்துக்கொண்டபோதிலும்கிடைக்கப்பெற்ற ஆதாரங்களை கவனத்திற்கொண்டு சாதாரண சட்டத்தின் கீழ் இவர்கள் மீது குற்ற வழக்குத் தொடருவது ஏற்றதல்ல என சட்டமா அதிபதி மதியுரை வழங்கினர், பாதுகாப்புக்கு ஆபத்து என்ற முறையில் இவர்களைத் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்கு காரணம் இருந்தது. எனினும் மறைந்த அல்பிரட் துரையப்பா உட்பட சில பெற்றோர்களும் ஏனைய அரசியல் வாதிகளும் கொடுத்த வாக்குறுதியின்பேரில் இரக்க உணர்வினல் உந்தப்பட்டு இனிமேல் வன்முறைகளில் ஈடுபடமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் இவர்களை விடுதலைசெய்யும் பொறுப்பினை ஏற்றேன்"

1975செத்தெம்பர் 2இல் தேசியபேரவையில் பாதுகாப்பு வெளிநாட்டு அலுவல்களின் துணையமைச்சர் பேசுகையில் பாதுகாப்பு நலன் கருதி ஏறக்குறைய 30 இளைஞர்களை தடுப்புக் காவலில் வைத்திருக்கவேண்டும் என பாதுகாப்பு வெளி

—5-ம் பக்கம் பார்க்க

படித்தீர்களா?

''மண்டூர் அசோகா''வின்

## "கொன்றைப் பூக்கள்"

(சிறுகதைத்தொகுதி)

பிரபல புத்தக நிலையங்களில் விற்பனையாகிறது.

விபரங்கட்கு:

80 1/4 பிறைஸ் பிளேஸ், கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழினத்தின் அமைதியான

—1-ம் பக்கத் தொடர்

அவசரகாலச்சட்டப் பிரகடனமும் அதன் கீழ் ஆக்கப்பட்ட பிரமாணங்களின் உருவான ட்ரயல்-அற்-பார் நீதிமன்றமும் செல்லுபடியாகாதவையென்ற தமது வாதத்தை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தொடர்ந்து நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார். திரு. அமிர்தலிங்கம் உட்பட கூட்டணியினர் நால்வர் மீதும் சுமத்துவதற்கு ஏதுவாக இருந்த அவசரகாலச்சட்டப் பிரமாணங்களும் செல்லுபடியாகாதவை என்று திரு. பொன்னம்பலம் தொடர்ந்து வாதிட்டார்:

தமிழர் கூட்டணிசெயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு எதிரான ட்ரயல்-அற்-பார் விசாரணை நீதிபதிகள் குழாம் முன்னர் கடந்த 12-7-76 முதல் தொடர்ந்து நடைபெற்றுவருவது தெரிந்ததே. சட்டமா அதிபர் திரு. சிவா. பசுபதியின் வாதங்களுக்குப் பதிலளித்து இந்த வாரம் முழுவதும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. ஸி. உரைநிகழ்த்தினார்.

பல்வேறு வழக்குகளின் தீர்ப்புக்களையும் சட்ட நுணுக்கங்களையும் மேற்கோள் காட்டி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் வாதித்தார்.

அவசரகாலச்சட்டமும் பிரமாணங்களும் சட்டப்படி செல்லுபடியாகாதவை; சட்டவலுவற்றவை என்ற தமது வாதத்தை திரு. பொன்னம்பலம் தொடர்ந்து நிகழ்த்தினார். அவர் அங்கு கூறியதாவது:—

ஒரு நீதிமன்றத்துக்கு ஒரு குறிப்பிட்ட வழக்கை விசாரிப்பதற்கு அதிகாரம் இல்லையென்று இன்னுமொரு நீதிமன்றத்துக்கு ரிட்மனு கொண்டுவந்து வாதாடுவதை நேரடி ஆட்சேபம் என்று எடுத்துக்கொள்ள முடியும். சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திலேயே அந்நீதிமன்றத்துக்கு மே[ல]டி வழக்கை விசாரணை செய்வதற்கு அதிகாரமில்லையென்றும் வாதாட முடியும். அந்த அடிப்படையிலேயே நாம் இவ்வழக்கைப் பொறுத்தமட்டில் கடைப்பிடிக்க விரும்புகிறோம்.

விப்டன்ஸ் வழக்கில் உயர் நீதிமன்ற நீதிபதிகள் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலேயே நாமும் இவ்வழக்கை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்துக்கு எவ்வித அதிகாரமும் இல்லையென்று ஆட்சேபிக்கிறோம். இந்த ஆட்சேபணையை நாம் வேறு ஒரு நீதிமன்றத்துக்குப்போய் 'ரிட்' மனுசெய்து வாதாடவேண்டியதில்லை. அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்நீதிமன்றத்தை ஏற்படுத்தியிருக்கும் சட்டப்பிரமாணமும் எதிரிமீது குற்றங்களை சுமத்துவதற்கு காரணமாயமைந்த சட்டப் பிரமாணங்களும் சட்டபூர்வமானவையல்ல; ஆகவே மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகளான நீங்கள், எமது இந்த ஆட்சேபனையை ஆராய்ந்து உங்கள் தீர்ப்பை வழங்கவேண்டும். இது உங்கள் கடமையாகும்.

நீதிபதி செல்லையா:- அவசரகாலச்சட்டப்பிரமாணங்களின்கீழ் எதிரி மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களை குற்றங்களாகக் கொள்ளக் கூடாது என்று கூறுகிறீர்களா?

ஜீ. ஜீ.:- மதிப்புக்குரிய நீதிபதி அவர்களே! எமது அந்த வாதத்தை ஆராய்ந்து உங்கள் தீர்ப்பை நீங்கள் வழங்கலாம். ஆனல் அதற்கு முன் இந்நீதிமன்றத்துக்கு இவ்வழக்கை விசாரணை செய்வதற்கு அதிகாரம் இல்லையென்ற எமது பூர்வாங்க ஆட்சேபனைக்கு உங் தீர்ப்பினை வழங்கவேண்டும்.

நீதி. செல்லையா:- இவ்வழக்கை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லையென்ற ஆட்சேபனை மீது தீ[ர்]ப்பு வழங்குவதற்கு இந்நீதிமன்றத்துக்கு அதிகாரம் இருக்கிறதா?

ஜீ. ஜீ.:- இருக்கிறது ஐயா!

## சிறையிருக்கும் தமிழ் இளைஞர் நிலை பற்றி...

- 2-ம் பக்கத் தொடர்

நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வேண்டியதற்கு அமைய தொடர்ந்தும் இவர்களை தடுப்புக் காவலில் வைத்திருப்பதாகக் கூறினார் (தேசிய பேரவை விவாதங்கள் 75 செத்தெம்பர் 2 பக்கம் 694)

1976 சனவரியில் அனைத்துலக மன்னிப்புக் குழுவுக்குக் கிடைத்த தகவலின்படி அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் எதுவித குற்றச்சாட்டுகளும்கொண்டு நீதிமன்றத்தின் முன்பு நிறுத்தாத முறையில் ஏறக்குறைய 50தமிழர்கள் இருப்பதாக அறியக்கிடக்கிறது.

குற்றவியல் குற்றங்களையொட்டி எந்த தனி மனிதன் மீதும், எந்தவொரு அரசாங்கமும் நடவடிக்கை எடுப்பது பற்றிகேள்விகேட்பது அனைத்துலக மன்னிப்புக் குழுவினுடைய நோக்கமல்ல. கிளர்ச்சியை அடுத்து சிறைப்படுத்தப்பட்ட மக்களைப்பற்றி பிரிவு 2 இன் கீழ் வழங்கப்பட்ட விதந்துரைகளின்படி வன்முறை குற்றங்களில் ஈடுபட்டுள்ளதாக சான்று இருப்பின் காலந்தாழ்த்தாது அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தும் வகையில் புலனாய்வினைத் துரிதப்படுத்தும் படியும் குற்றம் செய்யவில்லையென்று காணப்பட்டோரை உடனடியாக விடுதலைசெய்படியும் கூறப்பட்டது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றவை விதி பின்வருவதாக அமைந்துள்ளது. 1974 டிசெம்பர் 21 இல் அவசரகால (சதி முயற்சியைத் தடுக்க) ஒழுங்கு விதிகளின்படி "தேசிய பேரவையின் நடவடிக்கைகளில் அல்லது எந்தவொரு நீதிமன்ற நடவடிக்கைகளில் அன்றிவேறு எந்தவொரு இடத்திலாவது இலங்கை குடியரசுச் சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மை பற்றியோ அல்லது அதனின் ஏற்பாடுகள் ஏதும் பற்றியோ சொற்களாலோ நடத்தையாலோ அல்லது எதிர்த்து ஏதாவது கேள்வி கேட்பதோ எவ்விதமான எதிர்ப்பு காட்டுவதோ குற்றமாகும்.

இந்த ஏற்பாடு இல்லாத குடியரசின் சட்டத்தின் விதி 18 ஜீ குறிக்கப்பட்டுள்ள பேச்சுச் சுதந்திரத்தை கடுமையாக கட்டுப்படுத்துவதோடு குறிப்பாக சிறுபான்மையான தமிழரின் மக்கள் ஆட்சி முறை எதிர்ப்பையும் கட்டுப்படுத்துவதாகும் என்பதனை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## சாகும்வரை...

—1-ம் பக்கத்தொடர்

நீதியான போராட்டத்தையறியட்டும்'' என்று கூறும் இக்கடிதம், பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாகத் தெரிகிறது.

(1) 1976 ஆகஸ்ட் நடுப்பகுதியில் நடைபெறவிருக்கும் கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டின் முன்னர் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் அனைவரும் எந்தவித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்படவேண்டும்.

(2) சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை நீதிவிசாரணைக்குட்படுத்த விரும்பினலும் 1976 யூலை மாத இறுதிக்குள் நீதிமன்றம் மூலம் குறித்த தமிழ் இளைஞர்களை பிணையில் விடுதலைசெய்ய வேண்டும்

மேற்படி இரு கோரிக்கைகளையும் நிறைவேற்றுதவிடத்து நீதியின் பெயரால் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்[து] [illegible] ணத்தை தாம் தழுவியிருப்பதாக அக்கடிதத்தில் பிரதமருக்கு அறிவித்துள்ளனர்.

## திருநகரில் கருத்தரங்கு

25-7-76 ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு திருநகர் இ. மு. ச. மண்டபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கு திரு. வே. கணேசபிள்ளையின் தலைமையில் இடம்பெறும் இந்தக் கருத்தரங்கில் கிளிநொச்சித் தொகுதி பா. உ. திரு. வீ. ஆனந்தசங்கரி பா. உ. அவர்களும் கிளிநொச்சி த. வி. கூட்டணி மாவட்டக் கிளை உறுப்பினர்களும், தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள்.

இதைத்தொடர்ந்து த. வி கூட்டணிக் கிளையும் தமிழ் இளைஞர் பேரவைக் கிளையும் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படும்.

## கொடுஞ் சிறை...

1-ம் பக்கத் தொடர்

அவள் கரத்தில் தவழ்கிறது. வெறும் அஞ்சல் அல்ல அது அவள் அண்ணனின் அன்பு வாழ்த்து

"தங்கச்சி அத்தான் கைபிடித்த நாள் பொன்னுவில் இங்கொருவன் உன் அண்ணன் சிறையினிலே இருந்தாலும் தங்க நிகர் ஒளிவீச தங்கள் உருவங்கள் என் நினைவில் பொங்கும் உவகை தர கண் எதிரே வரக் கண்டேன்! சங்கத் தமிழும் கலையும் போல் வாழ்க! எங்கள் இவனுமாரும் வீர முகில் போல் வாழ்க!! மங்காப் புகழ் அமிரும் அவர் மங்கையும் போல் வாழ்க!!!"

இப்படி வாழ்த்தியவர் வேறு யாருமல்ல—கொடுஞ்சிறையில் நீதி விசாரணையின்றி நீண்டகாலமாக தமிழர் விடுதலைக்காக தவமிருக்கும் பூ. நடேசானந்தம் தான் அந்த வீர இளைஞர்.

அந்தத் தமிழ்க் காளையின் கொடுஞ்சிறை வாழ்வு 24-7-76 அன்றுடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தி பெறுகிறது. கண்டி போகம்பரைச் சிறையில் அடைபட்டுக்கிடக்கும் இவர் தமிழர் நெஞ்சங்களிலும் சிறையிட்டிருக்கிறார்.

இவர்போல் விடுதலை வரலாற்றில் இடம்பெறப் போகும் விடுதலை வீரர்களின் தியாக வாழ்வு வீண் போ[illegible] பெற்று தலைநிமிர்ந்து நிற்[illegible] நாள் வெகு தொலைவில் இல்லை.


3ஆம் அறிவித்தல்

**விடுதலைப்பிரார்த்தனைக் குழுத்தொண்டர்களே!**

ஜெபத்தின் பயனக சென்ற சனி, புதனிலும் இப்பத்திரிகை மூலம் தந்த மூன்று அறிவித்தல்களுக்காகக் கட்டிய பணத்திற்கும் கண்டி வாலிபர் கிறிஸ்தவ சங்கக் கட்டிடத்தில் ஒவ்வொரு சனிக்கிழமை பிற்பகல் 3தொடக்கம் 6மணிவரைக்கும் இப்பகுதியில் இயங்கும் தொண்டர் கூடி ஜெபம் செய்ய இடவசதியும் ஒழுங்காக்கித் தந்த தேவாதி தேவனும் திரியேக கர்தருக்கு கனமும் மகிமையும் செலுத்துவோமாக.

இவ்வாறு எல்லாப் பட்டணங்களிலும் கூடி ஜெபம் செய்யஇடங்களும், மற்றும் தினசரி பத்திரிகைகளிலும் இவ்வாறு அறிவித்தல் கொடுத்து பிரார்த்தனைக் குழுக்களை உருவாக்க வசதிகள் உண்டாக்கித் தர தேவனை வேண்டிக்கொள்வோமாக.

கண்டியில் ஜெபத்தில் ஒன்றுபடவிரும்புகிறவர்களும் முன் அறிவித்தல்களுக்கு என்னுடன் தொடர்பு கொள்ளவிரும்புகிறவர்கள் கீழ் முகவரிக்கு எழுதலாம்.

பரம்

மறைதா பிரார்த்தனைக் குழு

கண்டி வாலிபர் கிறிஸ்தவ சங்கம்

88 A கொட்டகொல்லை வீதி, கண்டி


## இளைஞர்களை....

—1-ம் பக்கத் தொடர்

சட்டமறுப்பாக பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

இளைஞர்களை விடுதலைசெய்யக்கோரும் சுவரொட்டிகளும் சட்டமறுப்பு அடிப்படையில் எங்கணும் ஒட்டப்படுகின்றன.

இளைஞர்களை விடுதலைசெய்யக்கோரியும், அவர்கள் தொடங்கும் சாகும்வரை உண்ணாவிரதத்துக்கு இறைவனின் அருளை நாடியும் கோவில்களில் விசேட பிரார்த்தனைகள், பூசைகள் நடைபெறுகின்றன.

தமிழ் இளைஞர் பேரவையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் மகளிர்பேரவையும் கூட்டாக மேற்கொண்டிருக்கும் இந்த ஒருவார இயக்கத்தின் போது கடந்த அக்டோபர் 2ம்நாள் நடைபெற்றது போல — சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் குடும்ப உதவிக்கும், சட்ட உதவிக்குமாக உண்டியல் மூலம் தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் நிதி சேகரிக்கப்படுகிறது.

சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களின் விபரங்கள் அடங்கிய சிறு கையேடு ஒன்றையும் தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியிட்டுள்ளது. இந்தக் கையேடு விற்பனையிலிருந்து கிடைக்கும் பணமும் இளைஞர் நிதியில் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிறது.


## சுதந்திரன் வெளியீடுகள்

விற்பனையாகின்றன

○ அனைத்துலக நீதிச்சபை முன் இலங்கைத் தமிழர் பிரச்சினை ரூ 2-00
— தமிழர் கூட்டணி சமர்ப்பித்த அறிக்கை

(1) நெஞ்சம் நிறைந்த தம்பி ரூ 2-00
— சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன்

(2) தெருப் புலவர் சுவர்க்கவிகள். ரூ 1-00
— உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்

(3) துரோகிகளே! தூரவிலகுங்கள் ரூ 2-50
— சுதந்திரன் ஆசிரியர் கோவைமகேசன்

(4) தமிழ் மண் காப்போம் தாயகம் மீட்போம் ரூ 1-00
— ஈழவேந்தன்

(5) இலங்கையில் தமிழர் உயர் கல்வி ரூ 2-00
— பேராசிரியர் ஹின்றி குறூஸ்

(6) இலங்கைத தமிழர் இன்னல் திருமா ரூ 1-00
— டாக்டர் இரா. சனர்த்தனம் எம். ஏ.
— ஆ. இராசரத்தினம் எல்லாளன்

(7) ஏன் வேண்டும் தமிழ் ஈழம்! ரூ 1-00
— தேசிய பேரவையில் தமிழ் பிரதிநிதிகள் ஆற்றிய உரையின் தொகுப்பு

(8) தமிழக மறுமலர்ச்சியின் தந்தை மறைமலை அடிகள் ரூ 1-00
— ஈழவேந்தன்

தொடர்பு கொள்ளவேண்டிய இடம்

சுதந்திரன் வெளியீட்டகம்

194-ஏ, பண்டாரநாயக்கா வீதி

கொழும்பு-12



மில்க்வைற் சலவைப்பவுடரின் அற்புத சாதனை

மில்க்வைற் சலவைப் பவுடரை நீரில் கரைத்துத் தெளித்தால் பயிர்களில் உள்ள பூச்சி புழுக்கள் உடனடியாக மடிகின்றன.

ஒரு இரு பைக் 3/- விசேட கழிவு உண்டு

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இளைஞர் நல்வாழ்விற்காக காவடி நேர்த்திக் கடன்!

நீண்டகாலமாக விசாரணையின்றி, சிங்கள ஆட்சியின் சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் நல்வாழ்விற்காக இம்முறையும் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் காவடி எடுத்து நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதற்கு நூற்றுக்கணக்கான இளைஞர்கள் முன்வந்துள்ளனர்.

சென்றவருடம் காவடி எடுக்கவும் தடை விதித்து கவிஞர் காசிஆனந்தனையும், அவரது சகோதரர்களையும் கைதுசெய்து இன்றுவரை அடைத்து வைத்திருப்பது ஈழத்தமிழ் மக்கள் அறிந்த விடயமே. கவிஞரினால் திட்டமிடப்பட்ட காவடி நேர்த்திக்கடனை இம்முறையும் நிறைவேற்றுவதென மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவை முடிவுசெய்துள்ளது. சென்றமுறையைவிட இம்முறை காவடி ஊர்வலம் மிகச் சிறப்பாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இம்முறை கல்லடி நொச்சிமுனை பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் கல்லடி முருகன் கோவிலிருந்தும், மற்றையவர்கள் ஆனைப்பந்தி விநாயகர் ஆலயத்திலிருந்தும் தங்கள் நேர்த்திகளை ஆரம்பிப்பார்கள். இரண்டு ஆலயங்களிலிருந்தும் புறப்படுகின்ற காவடிகள் நகரின் மத்தியில் ஒன்றிணைந்து மாமாங்கேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடையும்.

காவடி தினத்திற்கு முன், சிறையிலிருக்கின்ற மட்டுநகர்ப் பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டால், காவடி நேர்த்தியில் அவர்களும் முக்கிய பங்கெடுப்பார்கள்.

காவடி ஊர்வலத்தில் கலந்துகொள்பவர்கள் 25-7-76 ஞாயிறு மாலை 5 மணிக்கு முன்பதாக குறிப்பிட்ட ஆலயங்களை வந்தடையும்வண்ணம் அமைப்பாளர்களினால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## திருக்கோவிலில் முள்காவடி

சிங்களச்சிறையில் நம் உடன்பிறப்புக்கள் வாடுவதை தவிர்க்கும்படியும், அவர்கள் விடுதலை பெற்று வெளிவரவேண்டுமென்று பிரார்த்தித்தலும், எதிர்வரும் 26-7-76ல் திருக்கோவில் திருவிழாவில் மிகவும் பிரமாண்டமான முறையில் 50க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் முள்காவடி எடுக்கத் தீர்மானித்து இருப்பதாகவும், இதில் மேலும் சேரவிரும்புபவர்கள் உடனடியாகத் தம்முடன் தொடர்பு கொள்ளும்படியும் தமிழ் இளைஞர் பேரவையின் அம்பாறை மாவட்ட செயலாளர் பொன் கோபாலன் வேண்டுகிறார்.

## தமிழ்த்தெய்வம் காத்திடுவான் நம் தமிழை

[வட்டுக்கோட்டை அல்லைப்பிட்டி? ...] [வட்டுவினை அல்லைப்பெற்றான் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 24-7-76 சனிக்கிழமை மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் சங்காபிஷேகமும் இரவு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறுகிறது. அதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது]

"முத்தமிழ் தருவான் முருகன்" என்பது முன்னோர் வாக்கு "முத்தமிழால் வைதாரையும் வாழவைப்போன் முருகன்" என்பது அருணகிரியார் திருவாக்கு.

தமிழுக்கும் முருகனுக்கும் எத்தனையோ ஒற்றுமைகள் உண்டு. தமிழ் என்றும் மொழிநயம், கவிநயம் பொருள் நயம் மிக்க, புகழ் குன்றாத இளமை மாறாத மொழி. முருகனும் என்றும் இளமை அழகுள்ள குமரனாகவே காட்சி தருகின்றான்; தமிழ்மொழியில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு, சூரரை அழிக்கத் தினவெடுத்த முருகனின் தோள்களும் பன்னிரண்டு. தமிழ்மொழியில் மெய் எழுத்துக்கள் பதினெட்டு, அடியவர்க்கு அருள் புரியும் கருணை முகமொன்றில் மூன்று கண்களாக ஆறு முகத்திலும் கண்கள் பதினெட்டு.

தமிழ்மொழியின் எழுத்துக்களை வல்லினம் மெல்லினம் இடையினம் ஆகப் பிரித்துள்ளார்கள், இம் மூன்று இனங்களிலுமிருந்து முறையே மு-ரு-க என்ற எழுத்துக்கள் சேர்ந்தே முருக என்று அமைகிறது. இதன் பொருள் இளமை மாறாத அழகு பொருந்தியவன் என்பதாகும்.

அவன் கையில் இருப்பது ஞானமாகிய வேல் அது ஞான அறிவின் மறுவடிவம். அறிவானது ஆரம்பத்தில் கூர்மையாகவும் பின்னர் பரந்தும் இறுதியில் ஆழமாகவும் செலகிறது. வேலவனின் கையிலுள்ள ஞான அறிவாகிய வேலினது வடிவமும் ஆரம்பத்தில் கூர்மையாகவும் பின்னர் பரந்தும் இறுதியில் ஆழமாகவும்செல்கிறது. ஆறுமுகப் பெருமான் கையில் வேல்வடிவில் ஞான அறிவே உள்ளது.

முருகன் தந்த அறிவினால் தான் தமிழர் இன்று உலகில் பரந்து வாழ்ந்தாலும் தாம் வாழும் இடங்களில் அறிவிற் சிறந்தவர்களாக ஆற்றல் மிக்கவர்களாக வாழ்கிறார்கள்.

கந்தவேளின் கருணை எமக்கு எந்தநாளும் உண்டு. கலியுக வரதன் கந்தப்பெருமானுக்கு இந்நாட்களில் நாட்டின் பல பாகங்களில் உள்ள ஆலயங்களில் குடமுழுக்கு வைபவம் நடைபெற்று அவன் அருளை அள்ளி வழங்கியபடியுள்ளான்.

அத்துடன் தில்லை மன்றுள் ஆடும் பெருமான் சிவகாமி அம்மையுடன் மாதோட்ட நன்நகரில் அடியார்க்கு அருள் பாலித்தபடி உள்ளான். இவையாவும் தமிழர்க்கு விடிவுகாலம் கிட்டிவிட்டது என்பதை எமக்கு உணர்த்துகிறது.

—ச. செந்துராசா

## கொழும்பு தமிழ் மகளிர் பேரவை அங்குரார்ப்பணம்!

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக் கிளை கடந்த 14-7-76 புதன் கிழமை மாலை கொழும்பில் தொடங்கிவைக்கப்பட்டது. தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெற்ற மகளிர் பேரவைத் தொடக்க விழாவிற்கு அனைத்திலங்கை தமிழ் மகளிர் பேரவை செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமைதாங்கினார். தொடக்கவிழாவில் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக் கிளைத்தலைவர்: திரு. ஈழவேந்தன், தமிழ் இளைஞர் பேரவையின கொழும்புக் கிளைத் தலைவர்: ஆ. ரகுபதிபாலஸ்ரீதரன் செல்வி. காயத்திரி தர்மலிங்கம் ஆகியோர் உரையாற்றினார்கள். பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவி: செல்வி திலகவதி கணபதிப்பிள்ளை, துணைத் தலைவி: செல்வி காயத்திரி தர்மலிங்கம், செயலாளர் செல்வி. கி. தம்பித்துரை, துணைச்செயலாளர் செல்வி ரஞ்சினி கந்தையா, பொருளாளர் திருமதி த. சின்னத்துரை, உபபொருளாளர் திருமதி ஊ. குமார், செயற்குழு உறுப்பினர்கள் — செல்விகள் ந. வேலாயுதம் தேவகி ஆறுமுகம், தேவி ஆறுமுகம் திருமதி லிங்கவேலாயுதம், திருமதி மகேசன்.

இறுதியில் திலகவதி கணபதிப்பிள்ளை நன்றி கூறினார்.

## எழுத்தாளர் பேரவையும்....

—2-ம் பக்கத் தொடர்

தாக்கம் என்பதினை தமிழ் மொழியின் வரலாற்று அடிப்படையில் விளக்கினார். மறைமலையடிகள் எந்த மொழி மீதும் வெறுப்புக் கொண்டதினால் தனித் தமிழ் இயக்கத்தைத் தொடக்கவில்லையென்றும், தமிழ் மொழியின் தனி இயல்பு அழிகின்றபோது பேசுகின்ற இனத்தின் தனித்தன்மையும் அழியும் என்ற பேருண்மையை உணர்ந்தே மொழியைக் காத்து அதன் ஊடாக அவ் இனத்தைக் காக்கும் முயற்சியில் மறைமலை அடிகள் ஈடுபட்டனர் என்பதனை பல சான்றுகள் கொண்டு விளக்கினார். தமிழகத்தில் நிலவிய பார்ப்பன ஆதிக்கத்தை தகர்த்தெறிய மறைமலை அடிகளின் பணி தேவைப்பட்டது. கல்கி, ஆனந்தவிகடன், சுதேசமித்திரன் ஆகிய இதழ்களில் கையாளப்பட்ட கலப்பு நடைத் தமிழ், பின்பு பெருமளவு நல்ல தமிழாக மாறியதற்கு மறைமலை அடிகளார் பணியின் தாக்கமே முக்கிய காரணம் என்று கூறிய அவர் கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தியின் உரைநடையில் பிற்காலத்தில் ஏற்பட்ட மாறுதலையும் குறிப்பாக சுட்டிக்காட்டினார்.

திரு. செ. இராசதுரை அவர் மறைமலை அடிகளாரையும் விபுலானந்த அடிகளாரையும் ஒப்பிட்டுப்பேசுகையில் தமிழ் இசையின் புத்துயிர்க்கு விபுலானந்தரின் பணி துணைநிற்கையில் தமிழ் உரை நடையின் புது மலர்ச்சிக்கு மறைமலை அடிகளின் பணி துணை நின்றது. மேலும் கூறுகையில் இவ்விரு அடிகளாருக்கும் இடையில்நெருங்கிய உள்ள உறவு நிலவியதையும் எடுத்துக் காட்டினார். இருவரும் துறவிகளாக விளங்கினர் ஆனால் அவர்கள் தமிழைத் துறக்காத துறவிகளாக விளங்கினர், என்று கூறிமுடித்தார்.

இவ்விழாவின் குறிப்பிடத்தக்க மற்றைய சிறப்பு யாதெனில் மறைமலை அடிகளார் எழுதிய நூல்களும், அவர் பற்றி எழுந்த நூல்களும் காட்சிக்கு வைக்கப்பட்டமையேயாகும். தற்பொழுது அச்சில் இல்லாத பல நூல்கள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டன. மறைமலை அடிகளின் அழகிய கையெழுத்தில் அமைந்த அஞ்சல் அட்டையும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இவை நீங்கலாக 1956 தொடங்கி 1976 வரை பலதுறை கருத்துக்களை உள்ளடக்கிய பல ஓவியங்களுடனும் எல்லா தமிழ் இயக்க கடித உறைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. மேலே குறிப்பிட்ட நூல் காட்சியும், கடித உறைக் காட்சியும் கற்றோர்க்கும், மற்றோர்க்கும் நல்விருந்தாக அமைந்திருந்தது. மக்கள் நூற்றுக்கணக்கில் வரிசையில் நின்று இக்காட்சியினை காணவிழைந்தது இந்நூற் காட்சி மக்களை எவ்வளவு தூரம் கவர்ந்திருந்ததென்பதையும் மக்களுடைய இன, மொழி உணர்வினையும். எழுச்சியினையும் எடுத்துக் காட்டுவதாக விளங்கியது. சுருங்கக் கூறின் மறைமலை அடிகளாரின் நூற்றாண்டு நிறைவு விழா தூங்கிக்கிடந்த தமிழ் இனத்தை துடித்தெழச்செய்த பெரு விழாவாக—வெற்றி விழாவாக விளங்கியது.

# பொத்துவில் தொகுதியில் கூட்டணிக் கிளைகள் அமைப்பு

14-6-76ல் கோமாரிக் கிராமத்திலும் (பாணமைப் பற்று) 26-6-76ல் விநாயகபுரம் கிராமத்திலும் த. வி. கூ. கிளைத் தலைவர் திரு. க. சிந்தாத்துரை அவர்கள் தலைமையில் கிளைகள் அமைக்கப்பட்டன. அமைப்புக் கூட்டங்களின்போது பொதுமக்கள் பேச்சாளர்களின் பேச்சை ஆர்வமுடன் கேட்டுக்கொண்டிருந்தனர். விநாயகபுரக் கிராமத்தில் இதுபோன்ற மக்கள் கூட்டம் எப்போதும் கூடியதில்லையென மக்கள் பேசிக் கொண்டனர்.

இக்கூட்டங்களில் திரு: சி. வை. அரசரெத்தினம், திரு. த. தருமரெத்தினம், திரு. ஆ. நடராசா (இளைப்பாறிய ஆசிரியர்) திரு. சோ. தவராசா, திரு. சு. குருநாதபிள்ளை ஆகியோர் ஒவ்வொரு கோணங்களில் பேசி தமிழ்த்தேசிய இனம் இலங்கை அரசியலில் நடத்தப்படும் விதம்பற்றியும் தமிழர் நடந்துகொள்ள வேண்டிய விதம்பற்றியும் விளக்கிக் கூறினார்கள். கூட்டமுடிவுகளில் கிளைகளின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

### கோமாரிக் கிளை

தலைவர்: திரு. சி. ஜெயானந்தம், உபதலைவர்: திரு. அ. டேவிட்ராசா, செயலாளர்: திரு. ஆ. தண்டபாணி, பொருளாளர்: பொ. ஜேசுரெத்தினம், ஆகியோருடன் திரு. சிங்கநாயகம் திரு. அ. ஆனந்தராசா, திரு. ஞா. வரதராசா, திரு. சி. ரெட்ணசிங்கம், திரு. இ. சுப்பிரமணியம், திரு. பெ ஞானசூரியம் நிர்வாகசபை உறுப்பினராகவும் திரு. அதிரநேரு ஆலோசகராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

### விநாயகபுரம் த. வி. கூ. கிளை.

தலைவர்: திரு. வே. சாமித்தம்பி, உபதலைவர்: திரு. பூ. வேலுமணி, செயலாளர்: திரு. மா. கந்தையா கி.ச.உ. உபசெயலாளர்: திரு. சீ. சிவானந்தம், பொருளாளர்: திரு. க. வேலுப்பிள்ளை ஆகியோருடன் திரு. க. சின்னத்தம்பி, திரு. சி. தம்பிமுத்து, திரு. க. கணபதிப்பிள்ளை, திரு. சு. கோவிந்தபிள்ளை, திரு. மா. தாமோதரம், திரு. அ. அல்பேட், திரு. பூ. நாகராசா, திரு. சா. காசிப்பிள்ளை, திரு. வீ. மாணிக்கம்பிள்ளை ஆகியோரைக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

### விநாயகபுரம் த. இ. பே. கிளை.

தலைவர்: திரு. சு. குருநாதபிள்ளை, உபதலைவர்: திரு. க: தங்கத்துரை, செயலாளர்: திரு. சிவலிங்கம், உபசெயலாளர்: திரு. சி. முருகமூர்த்தி, பொருளாளர்: திரு. வே. தெய்வநாயகம் ஆகியோருடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக 15 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர் கூட்டமுடிவுகளில் செயலாளர்: திரு. சி. வை. அரசரெத்தினம் நன்றியுரை கூறினார்.

## புதிய செயற்குழு

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தமிழ் இலக்கிய மன்றத்தின் 7வது ஆண்டுப் பொதுக்கூட்டம் 28-6-76 திங்களன்று நடந்தேறியது. பின்வருவோர் நடப்பு வருட அலுவலர்களாக தெரியப்பட்டார்கள். தலைவர்: திரு. த. சு. சுந்தரேஸ்வரன். துணைத்தலைவர்கள்: திரு. எஸ். அருமைநாயகம், திரு. எம். இராசரத்தினம். பொதுச்செயலாளர்: திரு. ந. தங்கராசா. துணைச் செயலாளர்: திரு. சிவா பத்மமோகன். பொருளாளர்: திரு. தி. சிறீஸ்கந்தராசா. துணைப்பொருளாளர்: திரு. க. மகாலிங்கம் மற்றும் 12 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொட்டிராமுலுவின் உண்ணுவிரதத்தினுல்

# புதிய ஆந்திரம் மலர்ந்தது!

## சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் உண்ணுவிரதத்தின் விளைவு என்ன?

அரசியல் இயக்கங்கள் பலவற்றுல் கிடைக்கமுடியாது போன தெலுங்குபேசும் மொழி வழி ராஜ்யம்தோன்றக்காரணமாக அமைந்தது பொட்டி ராமுலு அவர்கள் மேற்கொண்ட சாகும்வரைக்குமான உண்ணுவிரதப் போராட்டமே! பொட்டி ராமுலு அவர்கள் மேற்படி உண்ணுவிரதப் போரைத்தொடுத்தபோது—போராட்டத்தை ஆரம்பிததபோது போராட்டத்தைக் கவனியாதது போல் அசமந்தமாக இருந்த இந்தியப் பேரரசு போராட்டத்தால் பொட்டி ராமுலுவின் உயிர் பிரிந்தபோது—ஆந்திரமொழிவழி ராஜ்யத்துக்காக தமது உயிரையே அர்ப்பணித்தபோது பணிய நேரிட்டதும் மொழிவழி ராஜ்யமாக ஆந்திர ராஜ்யம் உருவானதும் வரலாறு.

இப்போது பொட்டி ராமுலுவின் வழியில் "சாகும் வரை உண்ணுவிரதம்" மேற்கொள்ளப்போவதாக சிறையிருக்கும் செம்மல்கள் அரசுக்கு இறுதி அறிவித்தல் தந்திருக்கின்றனர். அரசியல் காரணங்களுக்காக நீண்ட நாள் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுவிப்பதற்கு சர்வதேச அம்னஸ்டி இயக்கம் மேற்கொண்டமுயற்சிகள் எத்தனங்கள் யாவும் பலன் தராத காரணத்தால் எதிர் வரும் ஆகஸ்ட் 5ம் நாளுக்கு முன்பாக "விடுதலைசெய் அல்லது நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு நிறுத்து" என்று கோரியே சிறைவாழ் இளைஞர் தமது ஜீவ மரணப் போராட்டத்துக்கு நாள் குறித்துள்ளனர்.

இலங்கைச் சிறைகளில் அரசியல் காரணங்களுக்காக அடைக்கப்பட்டிருக்கு தமிழ் இளைஞர் நடத்தப்போகும் ஜீவமரணப்போராட்டம் சர்வதேச அம்னஸ்டி இயக்கம் உலகெங்கும் கொண்டிருக்கும் கிளை அமைப்புக்கள் வாயிலாகவும், உலகப் பத்திரிகைகள், வானெலிகள் வாயிலாகவும் உலக மக்களது மனச்சாட்சியின் முன் நீதித் தீர்ப்புக்கு வைக்கப் படவுள்ளது.

உலக மக்களது மனச்சாட்சி வழங்கிய தீர்ப்பை இது நாள்வரை தட்டிக் கழித்த இனவாத நா[...] தென்னுபிரிக்கா, ரொடீசியா மற்றும் சியோனிச இஸ்ரேல் போன்ற நாடுகள் மட்டும்தான்.

இப்போது இலங்கையும் மேற்படி இனவாத இனவொழிப்பு நாடுகளது வரிசையில் இடம்பெறப் போகின்றதா? அல்லது தனது இனவாத இனவொழிப்புப்போக்கை கைவிடப்போகின்றதா? என்ற கேள்வி அகண்ட உலகனைத்தும் வியாபித்துக்கேட்கப் கேட்கப்படப்போகின்றது. கைதுசெய்யப்பட்டுகாவலில் அடைபட்டிருக்கும் அரசியல்கைதிகளை இலங்கைஅரசு நீதி விசாரணைக்கு உட்படுத்துமா? அல்லது விடுதலை செய்யுமா?மாருகத்தொடர்ந்தும் இனவாதப்போக்கில் அவர்களை இருட்சிறையில் வைத்திருக்கப்போகின்றதா?

பொட்டி ராமுலுவின் அடிச்சுவட்டில் தமிழ் இளைஞர் மேற்கொள்ளப்போகும் ஜீவமரணப் போராட்டம் இலங்கை அரசின் மனதில் மாற்றத்தைக் கொண்டு வருமாக!

வியட்நாம் போர் உலக மனச்சாட்சியைத் தொடக் காரணமாக அமைந்தது. அங்கு ஒரு பௌத்த பிக்கு தமக்குத் தாமே தீ மூட்டி உயிர்நீத்த நிகழ்ச்சியாகும். அந்நிகழ்ச்சியால் அகில உலகமே ஆர்த்தெழுந்தது! ஏன் இலங்கையில் உள்ள பௌத்தர்களும் இடதுசாரியினரும் கொதித்தெழுந்து கண்டனக்குரல் ஒலித்தனர்: அதே பௌத்த பிக்குவின் பாதையிலே இந்திமொழித் திணிப்புக்கு எதிராக முதலில் சின்னச்சாமியும் அவரைத் தொடர்ந்து இருபத்தைந்து தமிழ் மாணவர்களும் தமிழ் நாட்டில் தீக்குளித்து உயிர்த் தியாகம் புரிந்தனர்.

இந்நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய தாக்கங்களை இலங்கை அரசு உணர்ந்து வாழு வாழவிடு என்ற கூட்டுச்சேரா நாடுகளது பஞ்சசீல கொள்கைகளின் அடிப்படையில் தமிழ் இளைஞர்களுக்கும் தமிழ் ஈழத்துக்கும் விடுதலை அளித்து எதிர்கால நட்புறவை விருத்திசெய்து கொள்வதே விவேகம்.

சேர். யோன் கொத்தலாவல பிரதமராக இருந்த போது நேப்பாள மன்னர் மகேந்திராவுக்கு அளித்த விருந்தில் வளர்த்த கன்றுக் குட்டியின் சடலத்தை வெட்டியதற்காகவும், பௌத்த ஜீவகாருண்ய கொள்கைக்கு மாறாக மன்னரோடு சேர்ந்து நடத்திய மிருக வேட்டைக்கு எதிராகவும் இந்நாட்டு பௌத்த பீடங்களும், பௌத்த சங்கங்களும் நடத்திய ஆர்ப்பாட்டங்களை நாம் மறந்துவிடுவதற்கு இல்லை.

மேற்படி பீடங்களும், பௌத்த சங்கங்களும் ஜீவ மரணப் போரில் குதிக்கும் தமிழ் இளைஞர் சார்பில் எவ்விதம் நடந்துகொள்ளப் போகின்றனவென்பதை அகில உலகும் உன்னிப்பாக அவதானிக்கப் போகின்றன;

செத்த கன்றுக்குட்டியின் சடலத்துக்காகவும், ஒரு மானின் உயிருக்காகவும் போர்க்குரல் எழுப்பியவர்கள் இவர்கள் மிருகத்திலும் மனிதன் உயர்ந்தவன் அல்லவா? இலங்கை அரசின் நாணயமும் நாகரிகப்போக்கும் சோதனைக்கு உட்படுத்தப் படுகின்றது. சிறையில் வாழும் தமிழ் இளைஞர்களால்.

தமிழ்இளைஞர்களதுஜீவன் காப்பாற்றப்படுமா? பௌத்த தர்மத்தின் மாண்பு துலங்குமா? தலைதூக்கிருப்பது இலங்கை அரசின் நாகரிகமா அநாகரிகமா?

—திரவியம்

## அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் பணிக்கு அமிர்தலிங்கம் பாராட்டு!

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தமிழ்தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் ஆற்றி வரும் பணிக்கு தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர்நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் தமது மனப்பூர்வமான பாராட்டுதல்களை தெரிவித்தார். கடந்த 12-7-76ல் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் தமிழ் இளைஞர்பேரவையினர் நடாத்திய கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு அ. எ. வி. சங்கத்தையும் அதன்நிர்வாகத்தையும்பாராட்டினர்.

திரு. அமிர்தலிங்கம் தமது பேசசில் கூறியதாவது:-

"தமிழின்உரிமைக்போரில் தமிழ்த்தொழிலாளர்களும் தோள்கொடுத்து அதைமுன்னெடுத்துச்செல்லவேண்டும் இத்தவகையில், தமிழ்மொழி வழித்தொழிற் சங்கங்கள் அனைத்தும் தமிழ்த்தொழிற் சங்கக்கூட்டணியாக அமைந்து, தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு பக்கபலமாக விளங்கி வருவது பாராட்டுக்குரியது. இதிலும் எல்லாவற்றுக்கும் முன்னேடியாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கமே விளங்குகிறது. கடந்த மே முதல் நாள் வரலாறு காணுத மாபெரும் மே நாள் ஊர்வலத்தை தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஆதரவுடன் அ. எ. வி. சங்கம் முன்னின்று நடத்தியது.

இப்போது அரசாங்கம் எம மீது தொடுத்திருக்கும் வழக்கை, தமிழ்தேசிய இனத்தின் மீது தொகுக்கப்பட்ட வழக்காக கருதி, அதற்குவேண்டிய உதவிகளையும், ஒத்தாசைகளையும்செய்வதில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் நிர்வாகிகள் இரவு பகலாக ஓய்வின்றி பணி புரிகிருர்கள். அரசாங்க எழுதுவினைஞர் சங்க அலுவலகமே இரவு பகலாக இந்த வழக்குக்காக வேலை செய்கிறது. இவ்வளவுதூரம் தமிழினத்தின பிரச்சினைமீது அக்கறைகொண்டு பாடுபடும அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும், அதன் நிர்வாகிகளும் தமிழ்ச் சமுதாயத்தின் முழுமையான பாராட்டைப்பெறுகிருர்கள். தமிழர் விடுதலைக்கூட்டணியின சார்பில் அவர்களை நான் பாராட்டுகிறேன்"

## சிறையில் நம் உடன் பிறப்புக்களை சாகடிக்கப்போகிறேமா?

ஈழத்தமிழினத்தின் மறுமலர்ச்சிக் காலத்தின் உச்சக் கட்டத்தில் நிற்கும் தமிழினம் தன்னுரிமை பெற்று வாழத் துடித்துக்கொண்டிருக்கிறது! நீதிச்சாலையிலே தமிழினத்தின் ஆட்சி வரலாறு ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது வரை, இலங்கை என்ற சிறிய நாடு இரண்டுபட்டால் வாழுமா என்று கேட்ட வரலாறு தெரியாதவர்களும் வாயடைத்து நிற்கும் காட்சி நம் கண்ணில் தெரிகிறது! அற்ப சலுகைகளுக்காக ஆள்வோர்க்கு ஆலவட்டம் பிடித்து ஆண்ட தமிழினத்தின் வரலாற்றைத் திரித்துக்கூறி தமிழினத்தைக் காட்டிக்கொடுக்கும் எட்டப்பர்கள் எல்லோரும் தமது பொட்டுக்கேடுகள் யாவும் புட்டுக்காட்டப் பட்டுவருகின்றனவே என்று செய்வதறியாது கதிகலங்கி நிற்[...]ர்கள்.

"ஆண்டபரம்பரை மீண்டுமொருமுறை ஆள நினைப்பதின் என்ன குறை? என்று கேட்ட குற்றத்திற்காக நீதி விசாரணை எதுவுமின்றி சிறைப்பறவைகளாக இருக்கும் எம்மினத்து இளைஞர்கள் இன்று தம்மைத்தாமே அழித்து ஆள்வோரின் கண்களையும், அகிலத்தினரின் கண்களையும் ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டக்களத்திற்கு இழுத்துவர காலக்கெடு கொடுத்த செய்தி நம் காதுகளுக்கு எட்டியிருக்கிறது! ஆவணித்திங்கள் 5-ம் நாள் முதல் எமது உடன் பிறப்புகள் பூட்டிய சிறைக்குளளே நடாத்தப்போகும் உண்ணுவிரதப் போராட்டத்தை ஆட்சியாளர்கள் எப்படிச் சமாளிக்கப்போகிருர்கள் என்பதைவிட நாம் எப்படி அவர்களையும் மிஞ்சிய தியாகத்தைச் செய்து நம்மினத்திற்கு விடுதலை தேடித்தரப்போகிறேம் என்பதை உடனடியாகத் தீர்மானித்துச் செயற்படவேண்டும்!

ஆட்சியாளரின் சிறைக்குள்ளே 67 பேரும் பெற்ற தியாகத்தழும்புகளை நாம் எப்படிப் பெறப்போகிறேம் என்று தீர்மானித்துச் செயற்படுவதிற்தான் நம் தாயகத்தின் விடுதலை தங்கியிருக்கிறது. எம் உடன் பிறப்புகள் தமி[...] விடுதலை பெற்றுத்தர நாம் மட்டும் சொகுசாக இருந்து சுகவாழ்வு அனுபவிப்பதா?

கோவை அண்ணு கண்ணீரில் வரைந்த அரசியல்மடல் எம்மினத்தின் கண்களைத் திறக்கச் செய்யட்டும்! ஆவணி 5க்குமுன் விடுதலைப் போரை விரைந்து தொடக்குவோம்! 'சிறையிருக்கும் இளைஞர் வாரத்"தில் எம் சிந்தனையைத் தெளிவாக்குவோம்! தேர்தல் காலங்களில் வாக்கு வேட்டையாட வீட்டுக்குவீடு செல்வதுபோல் விடுதலை வேட்டைக்கு வீரர்களைத் திரட்டுப் பணியில் வீடு வீடாகச் செல்வோம்! வீட்டுக்கொருவராய் வீரர்களைத் திரட்டுவோம்! சாதிப் பேயை அழிக்க சமபந்தி போசனத்தை நடத்துவோம்! தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறப்படுபவர்கள் வீடுகளிலேயே தங்குமிடவசதிகளை ஏற்படுத்துவோம்! அத்தகைய வசதிகளைச் செய்துகொடுக்க [...] கொண்டிருக்கிருர்கள்.

இதுவரைநாளும் பேச்சளவிலேயே காலத்தைக் கடத்திவிட்டோம், இனி மேல் செயலில் இறங்குவோம்! இளைஞர்படை வீடு வீடாகச் சென்று பிரசாரஞ் செய்யத் தயாராகவேண்டும்! தந்தை செல்வாவின் வெற்றிக்காக முழுமூச்சாக ஈடுபட்ட இளைஞர்படை தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக தளராது பாடுபடட்டும்!

உணர்ச்சிக்கவிஞர் தலைமையிலே எம் உடன்பிறப்புகள் உண்ணுவிரதப் போரைத் தொடங்கமுன் நாம் நமது போரைத் தொடங்குவோம்! உயிர்கொடுக்கத் துடித்து நிற்கும் இளைஞர்களின் உரிமைக்குரல் உலக சபையிலே எதிரொலிக்கட்டும்! தலைவர்கள் வழிகாட்ட இளைஞர்கள் தொடரட்டும்! தமிழினத்தின் விடுதலை விரைவினில் கிடைக்கட்டும்!!!

—காங்கைவேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

● சிறையிருக்கும் தமிழ் இளைஞர் வாரம்!

# மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் சிறப்பான ஏற்பாடுகள்!

எதிர்வரும் 23ம் திகதி முதல் 31ம் திகதிவரை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் தொகுதிதோறும் சிறப்புக்கூட்டங்கள் கருத்தரங்குகள் சிறையிருக்கும் இளைஞர்களின் குடும்பங்களுக்கான நிதி சேகரிப்பு துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தல் முதலான ஏற்பாடுகளைச் செய்வதென 18-7-76ல் வந்தாறுமூலையில் டாக்டர் பேரா. இராஜேந்திரம் இல்லத்தில் திரு. மு. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. சகல தொகுதிகளிலிருந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதிநிதிகள் சமூகமளித்திருந்தனர். பின்வரும் முறையில் இளைஞர் வாரம் அனுட்டிப்பதென ஏகமனதாக கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

23ம் திகதி மாலை தம்பிலுவில் திருக்கோயில் பொதுக் கூட்டம்.

24ம் திகதி காலை கருத்தரங்கு—பொத்துவில்.

24ம் திகதி மாலை பொதுக் கூட்டம் — அக்கரைப்பற்று.

25ம் திகதி மாலை கல்முனை. பொதுக்கூட்டம், கருத்தரங்குகள்.

28ம் திகதி காலை கருத்தரங்குகள்— மாலை பொதுக் கூட்டம் — களுவாஞ்சிக்குடி.

29ம் திகதி காலை கருத்தரங்குகள்—மாலை பொதுக் கூட்டம்—வாழைச்சேனை.

30ம் திகதி காலை கருத்தரங்குகள்—மாலை பொதுக் கூட்டம் — இருதயபுரம் மேற்கு, ஊறணி.

31ம் திகதி காலை கருத்தரங்குகள்—மாலை பொதுக் கூட்டம்—மட்டக்களப்பு.

இந் நிகழ்ச்சிகளில் செ. இராசதுரை. பா. உ. மு. மாணிக்கம், டாக்டர் அ. உதுமாலெப்பை, பூ. கணேசலிங்கம், ப ஜோசப், ஆ. வேல்முருகு, த. கோவிந்தசாமி, அற்புதராசா குருக்கள், பி. கோ. ஜெயலிங்கம், திருமதி கலா தம்பிமுத்து, திரு. சாம். பி. ரி. தம்பிமுத்து முதலான கூட்டணிப் பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள். தலைமை நிலையத்திலிருந்து பலர் கலந்து கொள்வர்.

18-7-76 மாலை வந்தாறுமூலை பிள்ளையார் ஆலய முன்றிலில் கருத்தரங்கும் நடைபெற்றது.

சுண்ணாகம் வேலழகன் தொழிற்சாலை கடைதல், வெல்டிங் செய்தல், இரும்பு கேற் யன்னல்கள், பூட்டுகள் முதலியன விவசாய யந்திரங்கள் திருத்தி உதிரிப் பாகங்கள் அமைத்துக் கொடுத்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்கள்

வேலழகன் தொழிற் சாலை,
காங்கேசன்துறை வீதி,
சுண்ணாகம்.

12-வது வெற்றி வாரம்!

செல்லமகால்

சுஜாதா, கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி,
நடித்த

ஜனாதிபதி விருது பெற்ற

'அவள் ஒரு தொடர் கதை'

திரைக் கதை—வசனம்
டைரக்ஷன்— கே. பாலச்சந்தர் B.S.c.

தயாரிப்பு:- இராம அரங்கண்ணல்

24-ம் திகதி முதல் றீகல் மட்டுநகர் திரையிலும் காண்பிக்கப்படும்

2-வது வாரம்

ஜெயிட்டி

எம் ஜி. ஆர். - தங்கவேலு

டி. ஆர். ராஜகுமாரி,

ஈ. வி. சரோஜா, சந்திரபாபு.

நடித்த

குலேபகாவலி

கிங்ஸ்லி 2வ-து வாரம்

முத்துராமன், விஜயகுமாரி, ரவிச்சந்தர்

நடித்த

அமுதா

பிளாசா 3-வது வாரம்

முத்துராமன்- கே. ஆர். விஜயா, ரவிச்சந்தர்

நடித்த- சோசக்காரி

கடைசி வாரம்

கெப்பிட்டல்

நடிகர் திலகம் சிவாஜி (இரட்டை வேடம்) உஷா, நந்தினி, மேஜர் சுந்தரராஜன், நாகேஷ், பண்டரிபாய்,
நடித்த—

கௌரவம்

(ஈஸ்ட்மென் கலர்)

வெலிங்டன் இப்பொழுது

சிவகுமார், ஜெயசித்ரா, கமலகாசன், ராணி சந்திரா, தங்கவேலு, மனோரமா, சுந்தரராஜன், சோ —நடித்த

தேன் சிந்துதே வானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு - 13 பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976ம் வருடம் ஜூலை மாதம் 25-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.